## 12ம் வகுப்பு பொதுதேர்வில்

# பூதங்குடி ப்ரைம் எஸ்.டி.சீயோன் பள்ளி சாதனை



பூதங்குடி ப்ரைம் எஸ்.டி. சீயோன் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியில் +2 தேர்வில் அதிக மதிப்பெண்கள் பெற்று சாதனை புரிந்த மாணவர்களை தாளாளர் சாமுவேல் சுஜின், நிர்வாக இயக்குனர் தீபா சுஜின் சால்வை அணிவித்து கேடயங்களை வழங்கினர்.

**சேத்தியாத்தோப்பு, மே 10:** பன்னிரண்டாம் வகுப்பு பொதுத்தேர்வில் சேத்தியாத்தோப்பு அருகே பூதங்குடி ப்ரைம் எஸ்.டி.சீயோன் பள்ளி மாணவர்கள் சிறப்பான தேர்ச்சி பெற்று பள்ளிக்குப் பெருமை சேர்த்துள்ளனர். இப்பள்ளியில் தேர்வு எழுதிய 110 மாணவர்களில், 15க்கும் மேற்பட்ட மாணவர்கள் 550க்கு மேல் மதிப்பெண்கள் பெற்று இமாலய சாதனை படைத்துள்ளனர். 63 மாணவர்கள் 500க்கு மேல் மதிப்பெண்கள் பெற்றிருப்பது பள்ளியின் தரமான கல்வி மற்றும் மாணவர்களின் கடின உழைப்பை வெளிப்படுத்துகிறது. 18 மாணவர்கள் கணினி அறிவியல் பாடத்தில் 100க்கு 100 மதிப்பெண்கள் பெற்று சாதனை படைத்துள்ளனர். இது பள்ளியின் உயர்தர கல்வி முறையையும், ஆசிரியர்களின் சிறப்பான பயிற்சியையும் எடுத்துக்காட்டுகிறது.

இந்த சாதனைகளில் சரண்யா என்ற மாணவி 579/600 மதிப்பெண்கள் பெற்று பள்ளியில் முதலிடம் பிடித்துள்ளார். கோகுலஸ்ரீ மற்றும் திவ்யதர்ஷினி ஆகிய மாணவிகள் தலா 577/600 மதிப்பெண்கள் பெற்று இரண்டாம் இடத்தைப் பெற்றுள்ளனர். லாவண்யா என்ற மாணவி 572/600 மதிப்பெண்கள் பெற்று மூன்றாம் இடத்தைப் பிடித்துள்ளார். இந்த சிறப்பான சாதனையை முன்னிட்டு, பள்ளியில் நடைபெற்ற பாராட்டு விழாவில், பள்ளி தாளாளர் டாக்டர் சாமுவேல் சுஜின், நிர்வாக இயக்குனர் டாக்டர் தீபா சுஜின் (குழந்தைகள் நல மருத்துவர்), தலைமை ஆசிரியர் அமலகுமார், உள்ளிட்டோர் மாணவ, மாணவியர்களுக்கு சால்வை அணிவித்து கேடயங்களை வழங்கினர்.